Departement des Innern
Amt für Gesundheit und Soziales

Kollegiumstrasse 28
Postfach 2161
6431 Schwyz
Telefon 041 819 16 65
Telefax 041 819 20 49

kantonschwyz

# பாதிக்கப்பட்டோருக்கான உதவிச்சட்ட தகவல்கள்

## 1. பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சட்டம் என்றால் என்ன?

2009 ஆம் ஆண்டு தை மாதம் 1 ஆம் திகதி முதற்கொண்டு இதுவரை காலம் அமுலில் இருந்த 1991 ஐப்பசி 4ஆம் திகதி உருவாக்கப்பட்ட பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சட்டத்திற்கு பதிலாக 2007ம் ஆண்டு பங்குனி 23 அன்று உருவாக்கப்பட்ட குற்றவியல் செயலினால் பாதிக்கப்பட்டோருக்கான உதவி வழங்கும் கூட்டுமாநிலச் சட்டம் (பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சட்டம், OHG, SR 312.5 ) அமுலுக்கு வருகிறது. பாதிக்கப்பட்டோருக்கு பயன் தரக்கூடிய உதவிகளைச் செய்வதும், அவர்களுக்கு உரிய உரிமைகளை மேம்படுத்துவதுமே இந்தச் சட்டத்தின் குறிக்கோள் ஆகும். அது தொடர்பானவை:

- ➔ துறை சார்ந்த அறிவு விளக்கமளித்தலும், கவனிப்பும்
- ➔ பாதிக்கப்பட்டோருக்கான பாதுகாப்பும், நடைபெறும் குற்றவழக்கில் அவர்களுக்கான உரிமைகளைப் பாதுகாத்தலும்
- ➔ நியாயமான இழப்பீடு வழங்குதலும், நிறைவு படுத்தலும்

## 2. பாதிக்கப்பட்டோருக்கான உதவிச் சட்டம் யாருக்குப் பொருந்தும்?

புலனாய்வு மூலம் குற்றவாளி கண்டு பிடிக்கப்பட்டாரோ இல்லையோ, அவர் குற்றவாளி என்கிற அடிப்படையில் தான் கைது செய்யப்பட்டாரோ இல்லையோ, எது எப்படியிருப்பினும், நடைபெற்றவொரு குற்றச்செயல் மூலமாக உடல் ரீதியாகவும், பாலியல் ரீதியாகவும் மற்றும் மனோவியல் ரீதியாகவும் நேரடியாகப் பாதிக்கப்பட்ட அல்லது துன்புறுத்தப்பட்ட (பலியான) ஒவ்வொரு நபருக்கும் மேற்படி சட்டம் பொருந்தும் (சட்டம் 1 பாதிக்கப்பட்டோருக்கான சட்ட உதவி). இச்சட்டம் தொடர்பாக பின்வரும் குற்றச்செயலில் உள்ளடங்குகின்றன: உடற்காயம் ஏற்படுத்தல், கொலை, கற்பழிப்பு, பாலியல் தொல்லைகள், பாலியல் ரீதியாக ஏமாற்றப்படுதல், கடினமான மிரட்டல்களும் இன்னல்களும், சுதந்திரத்தை பறித்தல், ஆட்கடத்தல், வீதி விபத்தின் மூலம் உடற்காயம் ஏற்படுதல் அல்லது உயிரிழப்பு ஏற்படுதல் என்பனவாகும். நேர்மைக்கு மாறாக நடத்தல், பலாத்காரச் செயல்கள், திருட்டு அல்லது ஏமாற்று போன்ற செயல்கள் மேற்படி குற்றச்செயல்களுள் அடங்காது, காரணம் இப்படிப்பட்ட செயற்பாடுகளால் ஒரு நபர், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வண்ணம் உடல், பாலியல், மற்றும் மனோவியல் ரீதியான நேரடிப் பாதிப்புக்கு உள்ளாவதில்லை. பாதிப்புக்குள்ளான நபர் ஒருவருடைய நெருங்கிய உறவினர்களுக்கு (உ–ம்: கணவன்/மனைவி, காதலன்/காதலி, பெற்றோர் அல்லது பிள்ளைகள்) பாதிக்கப்பட்டவருக்கு கிடைக்கும் அறிவுரைக்கு சமனான அறிவுரை பாதிக்கப்பட்டுவரைச் சார்ந்தவர்களுக்கும் வழங்கப்படும். இதே வேளையில் பாதிக்கப்பட்டவரின் உறவினருக்கு இழப்பீடு பெறுவதற்கும் நிறைவு படுத்தலை செய்வதற்கு கோருமான உரிமை வரையறுக்கப்பட்டுள்ளது. அவர்கள் தங்களுடைய உரிமைகளைத் தாங்களாகவே பெற்றுக் கொள்ள வேண்டும்.

## 3. பாதிக்கப்பட்ட நபருக்கு என்னென்ன உரிமைகள் உள்ளன?

துறை சார்ந்த அறிவுரை விளக்கமும், கவனிப்பும்

அங்கீகாரம் பெற்ற அறிவுரை விளக்கத் தளங்களிலிருந்து, கட்டணமின்றி பாதிக்கப்பட்ட நபர்கள் அறிவு விளக்கம் பெற்றுக் கொள்ளலாம். இந்தத் தளங்கள் பாதிக்கப்பட்ட நபர்களுக்குத் தேவையான மருத்துவ, மனோவியல், சமூகவியல், பொருள் மற்றும் சட்ட சம்பந்தப்பட்ட அனைத்து உதவிகளையும் தானே செய்தும், செய்வித்தும் உதவும். இந்த உதவிகள் உடனடி உதவிகளாகவோ, அல்லது நீண்டகாலதிற்கு உட்பட்ட உதவிகளாகவோ செய்யப்படும் அல்லது செய்விக்கப்படும். அத்துடன் இந்தத் தளங்கள் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பாதிக்கப்பட்டோருக்கான உதவி குறித்துமான விளக்கங்களை அறிவிக்கும்.
உடனடி உதவி என்பது எடுத்துக்காட்டாக, நெருக்கடிகாலத் தங்குமிடம் ஏற்பாடு செய்தல், சட்ட ரீதியான முதல் விளக்கம் பெற ஏற்பாடு செய்தல் அல்லது இடைக்கால நிவாரண உதவி வழங்குதல் போன்றவையாகும். பெரும்பாலும், பாதிப்புக்கு உள்ளான நபர் பாதிப்பின் விளைவுகளைக் கடந்து பழைய நிலைக்குத் திரும்புவதற்கு, உடனடி உதவி மட்டுமே போதுமானதாக இருப்பதில்லை. இச்சூழ்நிலையில் அவரது பொருளாதார நிலைக்கு ஏற்றவாறு (வருமானம், சொத்துக்கள் கணிப்பீடப்பட்டு) அதாவது மூன்றாவது நபரினால் வழங்கப்படும் நீண்டகால உதவிக்கு (மருத்தவ செலவு, சட்டதரணி செலவு, குடும்ப செலவு) போன்றவைகளை பொறுப்பெடுத்துக்கொள்ளப்படலாம். இன்னும் நீண்டகால உதவிகள் குறித்த, விண்ணப்பத்தை சுகாதார அலுவலகமும், சமூக நல அலுவலகமும் முடிவு செய்யும்.

**குற்றவியல் வழக்கிலான உரிமைகள்**

குற்றச்செயல் செய்தவர் மீது குற்றவியல் வழக்கு ஒன்று தொடுக்கப்படுமேயானால், பாதிக்கப்பட்டவருக்கு எப்படியும் நல்லதொரு உரிமைக் காப்பீடு உண்டு. ஆகவே அவர் தெளிவாக

- குற்றவியல் நீதிமன்றம் பொதுமக்களை அனுமதிக்காமல் வழக்கு விசாரணையை நடத்தவும்,
- வழக்கு நடைபெறும் போது நீதிமன்றத்துக்குள்ளே குற்றச்செயல் செய்தவரைத் தாம் நேரடியாகச் சந்திக்காமல் இருப்பதற்கும்,
- தாம் ஒரு சாட்சியாக விசாரிக்கப்படவோ அல்லது தகவலாளியாகவோ நீதிமன்றத்துக்குள் நுழையும் போது நம்பிக்கைக்குரிய நபர் ஒருவருடய துணையுடன் வருவதற்கும்,
- குற்றச் செயல் புரிந்தவரால் தாம் பாலியல் வன்முறைக்கு ஆளாகியிருந்தால், அது தொடர்பான விசராணையைத் தாம் பெண்ணாக இருப்பின் ஒரு பெண் மூலமாகவும் ஆணாக இருப்பின் ஆண் மூலமும் மட்டுமே விசாரிக்கப்பட வேண்டும் என்பதாகவும் வலியுறுத்தும் உரிமை பாதிக்கப்பட்டவருக்கு உண்டு. தம்முடைய மிக தனிப்பட்ட அந்தரங்க விடையத்தை குறித்து விளக்கமளிக்க மறுப்பதற்கும் உரிமையுண்டு.

**இழப்பீடும், நிறைவு படுத்தலும்**

பாதிக்கப்பட்டவரும் அவரது நெருங்கிய உறவினருக்கும் ஏற்பட்ட பாதிப்புக்காகவோ அல்லது உயிரிழப்பிற்காகவோ நட்டஈடு பெறுவதற்கு உரிமையுண்டு. (சட்டம் 19 OHG) இந்த விடையத்தில் பொருட்சேதங்கள் கணக்கில் கொள்ளப்பட மாட்டாது. குறிக்கப்பட்ட சில சூழ்நிலைகளில் நட்டஈட்டுத் தொகையின் ஒரு பகுதியை முற்கூட்டியே பெறுவதற்கு உரிமையுண்டு. (சட்டம் 21 OHG) கடினமான அளவு பாதிக்கப்பட்டிருப்பின் பாதிக்கப்பட்டவரின் அவரது உறவினருக்கும் ஏற்பட்ட நியாயமான இழப்புக்களையும் இன்னல்களையும் நிறைவுபடுத்துமாறு வழியுறுத்துவதற்கு உரிமையுண்டு. (தமது பாதிப்பினால் ஏற்பட்ட இழப்பிற்கும் இன்னல்களுக்குமான பதில் நடவடிக்கைகள்)

குற்றச்சம்பவம் நடைபெற்று முடிந்த ஐந்து ஆண்டுகளுக்குள்ளாக இழப்பீட்டுத் தொகைக்கும், நிறைவு படுத்தும் தொகைக்கும் விண்ணப்பம் செய்யப்பட வேண்டும். அப்படிச் செய்யபடாத நிலையில் அந்த உரிமை காலாவதியாகி விடும் ( சட்டம் 25 OHG). இதற்கு எந்த கண்டோனில் இந்த குற்றச்செயல் நடைபெறுகிறதோ அதற்கு அந்த கண்டோனே பொறுப்பு (சட்டம் 26 OHG). வெளிநாடுகளில் இக்குற்றச்செயலினால் பாதிக்கப்பட்டோருக்கு நட்டஈடு பெறும் உரிமையோ அல்லது நிறைவு படுத்தும் உரிமையோ வழங்கப்படமாட்டாது (சட்டம் 3 OHG).

4. குற்றச்செயல் மூலம் பாதிப்புக்கு உள்ளானவர் எப்படிச் செயற்படலாம் ?

பாதிப்புக்குள்ளான நபர், குற்றச்சம்பவம் நடைபெற்ற உடனேயே 117 என்கிற அவசரத் தொலைபேசி எண் மூலம் காவல் துறையினருக்கு அறிவிக்கவோ, அல்லது நேரடியாக ஒரு காவல் நிலையத்துக்குச் சென்று கூறவோ வேண்டும். அங்கு நடைபெறுகின்ற விசாரணையின் அடிப்படையில், காவல் துறையினர் பாதிக்கப் பட்டவர்களுக்கான உதவிச்சட்டத்துக்கான முக்கிய தகவல்களை எடுத்துச் சொல்வதுடன் கூடவே, ஷ்வேய்ட்ஸ் கண்ட்டோனில் உள்ள பாதிக்கப் பட்டவர்களுக்கான அறிவுரைத் தளங்களின் முகவரி களையும் தருவார்கள். பாதிக்கப் பட்டவர்களுக்கான அறிவுரைத் தளங்களின் வேலை நேரம் தவிர்த்த மற்ற நேரங்களில் பெயர்மறைவாக 143 என்ற எண்ணுக்குத் தொடர்பு கொண்டு தொலைபேசி வழியே அங்குள்ளவர் வழங்கும் அறிவுரைகளைப் பெற்றுக் கொள்ளலாம். மற்றபடிக்கு, பாதிக்கப்பட்ட நபர் குற்றச் சம்பவம் நடைபெற்றவுடனேயே கூட நேரடியாகவே அங்கீகரிக்கப்பட்ட அறிவுரைத்தளத்துக்குச் சென்று முறையீடு செய்யலாம்.

ஷ்வேய்ட்ஸ் கண்ட்டோனில் உள்ள பாதிக்கப் பட்டவர்களுக்கான அறிவுரைத் தளங்களின் முகவரிகள்:

**Opferhilfe**
Beratungsstelle Kanton Schwyz
Gotthardstrasse 61a
6410 Goldau

Tel. 0848 821 282
Fax 041 857 07 43
opferhilfesz@arth-online.ch
www.arth-online.ch/opferhilfe